# கீழே வேர்பற்றி மேலே கனிகொடுத்தல்

Transcribed from a message spoken in April, 2013 in Chennai

By *R.S.Milton*

*"யூதா வம்சத்தாரில் தப்பி மீந்திருக்கிறவர்கள் மறுபடியும் கீழே வேர்பற்றி மேலே கனிகொடுப்பார்கள்" (ஏசாயா 37:31). "நீதிமானுடைய வேர் கனிகொடுக்கும்" (நீதி. 12:12). "வேரானது பரிசுத்தமாயிருந்தால் கிளைகளும் பரிசுத்தமாயிருக்கும்" (ரோமர் 11:16).*

## எதிரியின் தாக்குதல்

*ஏசாயா 36, 37ஆம் அதிகாரங்களை வாசித்துப்பாருங்கள். இந்த வாரம் இது தொடர்பான ஒரு செய்தியை நாங்கள் வாசித்து மிகவும் பயனடைந்தோம். அசீரியா நாடு எருசலேமுக்கு எதிராகப் படையெடுத்து வந்து எருசலேமைச் சுற்றி முற்றுகைபோட்டிருக்கிறார்கள். ரப்சாக்கே என்பது அந்தத் தளபதியின் பெயர். சனகெரீப் என்பது அந்த அரசனின் பெயர். இஸ்ரயேலோடு ஒப்பிடும்போது அசீரியா ஒரு பேரரசு, இஸ்ரயேல் ஒரு சிற்றரசு. இஸ்ரயேலின் படையைப்போல் அசீரியாவின் படை பலமடங்கு பெரியது. சனகெரீப் அரசனுடைய மந்திரி ரப்சாக்கே இஸ்ரயேல் மக்களுக்கு எழுதுகிற ஒரு கடிதம் ஏசாயா 36, 37இல் இருக்கிறது. அவன், "நாங்கள் எத்தனையோ நாடுகளுக்கு எதிராகப் படையெடுத்துச் சென்று, அந்த நாடுகளையெல்லாம் அழித்திருக்கிறோம். அந்த நாட்டிலுள்ள தேவர்களால் அவர்களைக் காப்பாற்ற முடியவில்லை. அதுபோல, இஸ்ரயேலின் தேவனாலும் உங்களைக் காப்பாற்றமுடியாது.," என்று சொல்லுகிறான்.*

*அசீரியப்படை எருசலேமின் வாசலிலே நின்றுகொண்டிருக்கிறது. எல்லாரும் பயத்தோடு எருசலேம் நகரத்துக்குள் இருக்கிறார்களா. அசீரியாவை எதிர்த்து அவர்களால் சண்டைபோட முடியாது. ஏனென்றால், அது அவ்வளவு பெரிய படை. அந்த முற்றுகை தொடர்ந்தால் வழக்கம்போல் உணவு கிடைக்காது, தண்ணீர் கிடைக்காது, கடைசியில் அவர்கள் சரணடைவார்கள். இதுதான் பொதுவாக நடக்கும்.*

## நம்பிக்கையற்ற சூழ்நிலை

*அவன் அனுப்புகிற அந்தத் தூதை யூதாவின் இராஜாவாகிய எசேக்கியா எடுத்துக்கொண்டுபோய் தேவனுடைய சமுகத்தில் வைத்து ஜெபிக்கிறான். அசீரியாவின் தளபதி ரப்சாக்கேவின் பயமுறுத்தலை அவன் தேவனுக்கு விவரிக்கிறான். உயிர் பிழைப்போம் என்ற நம்பிக்கை அவர்களுக்கு இல்லை. இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் வேதாகமம் முழுவதும் காணப்படுகின்றன. தேவனுடைய மக்களுக்கு ஒருசில மாதங்களுக்கு முன்பு அல்லது ஒருசில வருடங்களுக்கு முன்பு இப்படிப்பட்ட சூழ்நிலைகள் வந்திருக்கலாம். இப்படிப்பட்ட சூழ்நிலைகள் எப்போது வேண்டுமானாலும் வரலாம். இப்போது வரலாம் அல்லது ஒருசில மாதங்கள் கழித்தும் வரலாம். "உயிர் பிழைப்போம் என்ற நம்பிக்கை அற்றுப்போயிற்று அல்லது முடிவு வந்துவிட்டது. இனிமேல் நம்பிக்கைக்கு இடம் இல்லை," என்ற நிலை ஏற்படலாம். ஒரு கேள்வி எழும். தேவன் ஏன் இப்படிப்பட்ட சூழ்நிலைகளை ஏற்படுத்துகிறார் அல்லது அமைக்கிறார் அல்லது அனுமதிக்கிறார்?*

*பல சமயங்களில் நாம் மரணச் சூழ்நிலை என்று சொல்லும்போது, அதில் பலவிதமான சூழ்நிலைகள் அடங்கியுள்ளன. இதில் ஒரு முக்கியமான ஒரு சூழ்நிலை என்னவென்றால், "இனிமேல் நம்பிக்கைக்கு இடம் இல்லை," என்ற முடிவுக்கு வந்துவிட்டோம். இது மரணச் சூழ்நிலையின் அற்றம். யோவான் 11ஆம் அதிகாரத்தில், லாசரு மரித்தபிறகு நான்கு நாட்கள் கழித்து ஆண்டவராகிய இயேசு அங்கு செல்கிறார்; கல்லறைக்குச் செல்கிறார். "கல்லை எடுத்துப்போடுங்கள்," என்று அவர் சொன்னவுடன் லாசருவின் சகோதரி மார்த்தாள், "ஆண்டவரே, இப்பொழுது நாறுமே, நாலு நாளாயிற்றே," என்று பதில் சொல்லுகிறாள். அவள் சொல்வதின் பொருள் என்ன? "நீர் வழக்கமாக பல வல்லமையான செயல்களைச் செய்திருக்கிறீர். ஆனால், இது நீர் இதுவரை சந்தித்த சூழ்நிலைகளைவிடக் கொஞ்சம் வித்தியாசமானது, அவைகளுக்கு மிஞ்சியது. நான்கு நாட்கள் ஆயிற்றே! இது நம்முடைய திராணிக்கு மிஞ்சியது இல்லையா?" இதுதான் மார்த்தாளின் கூற்று. இப்படி நம்பிக்கைக்கு இடம் இல்லை என்று சொல்லும் அளவுக்குத் தேவன் நம் வாழ்க்கையில் நம்மை நடத்துகிறார்.*

## தேவன் அனுமதிக்கிறார்

*அசீரியாவின் படையெடுப்பை ஏவிவிட்டது சாத்தான்தான். ஆனால், தேவன் அதை அனுமதிக்கிறார். லாசரு வியாதிப்பட்டு மரிப்பதற்குக் காரணம் சாத்தான்தான். பிசாசுதான் அதைச் செய்கிறான்.*

ஆனால், தேவன் அதை அனுமதிக்கிறார். இன்னும் சொல்லப்போனால், அந்த அசீரியப் படைகளை, சனகெரீப் அரசனை அல்லது ரப்சாக்கேவை, எழுப்புவது யார்தான் என்று சொல்லலாம்? தேவன் தான். அவர்களுடைய இருதயத்தில் அப்படிப்பட்ட ஓர் எண்ணத்தை அவர் போடுகிறார். "எருசலேமுக்கு எதிராக நீ படையெடுத்துப் போ," என்று அவர் அவனைத் தூண்டிவிடுகிறார். அவனுடைய இடத்தை விட்டு அவர் அவனை வெளியே இழுக்கிறார். தேவன் அனுமதிக்கிறார்.

முதலாவது ஒரு கேள்வி வரும். அவர்கள் அந்தப் படையெடுப்பைத் தொடங்கும்போதே தேவனால் அதைத் தடுத்து நிறுத்த முடியுமா முடியாதா? முடியும். தேவனால் எவ்வளவோ காரியங்களைச் செய்ய முடியும். அவர்கள் படையெடுக்கும்போது அவர்களுடைய நாட்டில் ஒரு பஞ்சம் வந்துவிட்டதென்றால் அவர்கள் படையெடுப்பார்களா? அல்லது அவர்கள் தங்கள் படையெடுப்பைத் தொடங்கும்போது அவர்களுடைய நாட்டுக்கு எதிராக அவர்களைவிடப் பலம்வாய்ந்த இன்னொரு நாடு படையெடுத்து வந்தால் அவர்கள் இஸ்ரயேல் நாட்டின்மேல் படையெடுப்பாளர்களா? படையெடுக்க மாட்டார்கள். எனவே, அவர்கள் படையெடுக்கும்போதே தேவனால் அவர்களைத் தடுக்க முடியுமா? முடியும். அல்லது அவர்கள் பாதி வழியில் வரும்போது அவர்கள் படையில் ஏதாவது ஒரு தொற்று வியாதி வந்து நிறைய போர்வீரர்கள் இறந்துவிட்டால் அவர்கள் படையெடுப்பைத் தொடர்வார்களா? தொடரமாட்டார்கள். அப்படி நடக்க முடியுமா? தேவனால் செய்ய முடியுமா? நிச்சயமாக முடியும்.

லாசரு வியாதியாக இருக்கிறான் என்று தெரிந்தபோது அல்லது கேள்விப்பட்டபோது இயேசுவால் அங்கு வந்திருக்க முடியுமா? முடியும். அவன் நோய்வாய்ப்பட்டிருக்கிறான் என்ற செய்தி அவருக்கு எட்டுகிறது. ஆனாலும், அவர் போகவில்லை. "உம்முடைய நண்பனாகிய லாசரு மரணத்தருவாயில் இருக்கிறான்," என்று சொல்லி அனுப்பியபிறகும் அவர் போகவில்லை. அவர் இருந்த இடத்திலேயே இருந்து விடுகிறார்; போகாமல் தாமதித்து விடுகிறார். ஒருநாள் கழித்து போயிருக்கலாமா? போயிருக்கலாம். இரண்டு நாள் கழித்து போயிருக்கலாமா? போயிருக்கலாம். மூன்றுநாள் கழித்து போயிருக்கலாமா? போயிருக்கலாம்.

## அசைக்கப்படமுடியாத சொத்து

ஏன் அனுமதிக்கிறார் அல்லது தாமதிக்கிறார்? இந்தச் சூழ்நிலையை தேவன் யாருக்கு அனுமதிக்கிறார்? தேவனுக்கு ஒரு தேவை இருக்கிறது. அசைக்கப்பட முடியாத ஒரு சொத்து அல்லது ஒரு சுதந்தரம் அல்லது ஒரு பொருள் தேவனுக்குத் தேவை. அசைக்கப்பட முடியாத ஒன்று. தேவன் எல்லாவற்றையும் அசைப்பார் என்று எபிரெயர் 12இல் வாசிக்கிறோம். எல்லாவற்றையும் தேவன் குலுக்குவார், அசையப்பண்ணுவார். எவைகளெல்லாம் நமக்கு அருமையானவை, விலையேறப்பெற்றவை, இன்பத்தையும் மகிழ்ச்சியையும் தரக்கூடியவை, களிப்பையும் குதூகலத்தையும் தரக்கூடியவை என்று நினைக்கிறோமோ அவை எல்லாவற்றையும் தேவன் அசைப்பார், குலுக்குவார்.

உங்கள் வீட்டில் தீ பிடித்துவிட்டது என்று வைத்துக்கொள்வோம். ஒரேவொரு பொருளை மட்டும்தான் வீட்டிலிருந்து எடுத்துக்கொண்டு போக வேண்டும் என்றால் நீங்கள் எதை எடுத்துக்கொண்டு ஓடுவீர்கள்? பணம்? பொருள்? ஆள் மட்டும் தப்பித்தால் போதும் என்று ஓடுவீர்களா? சோறு போடும் என்று நினைக்கிற உங்கள் பட்டம்? வீட்டுப் பத்திரம்? அப்படிப்பட்ட சூழ்நிலையில் நாம் எதை எடுத்துக்கொண்டு ஓடுகிறோமோ அது நம் இருதயத்தை இனங்காட்டிவிடும். அசைக்கப்படும்போது, குலுக்கப்படும்போது மீதியாயிருப்பதுதான் நம்மை இனங்காட்டும்.

இந்த உலகத்தில், அவருடைய சபையில், தேவனுடைய மக்களுடைய மத்தியில், கடைசியில் தேவன் ஒரு அசைப்பொன்றை அசைப்பார். அசைத்தபிறகும் ஏதோவொன்று தன் பிள்ளைகளுக்குள் நிலைத்து இருக்க வேண்டும் என்று தேவன் விரும்புகிறார். தேவனுடைய விருப்பம் என்னவென்று கேட்டால் ஒரு குலுக்கு குலுக்கினபிறகு, அசைத்தபிறகு, அங்கு விலையேறப்பெற்ற ஒன்று இருக்க வேண்டும். இது தேவனுடைய விருப்பம். அசைக்கப்படமுடியாது ஒன்று தேவனுடைய மக்களுக்குள் உருவாக வேண்டும் என்பது தேவனுடைய விருப்பம்.

இன்று தேவனுடைய மக்களை ஓர் அசைப்பு ஒன்று அசைத்தால் அதன்பிறகு அங்கு ஒன்றுமே இருக்காது என்பதுதான் என் கணிப்பு. ஒரு வியாதி வருகிறது என்று வைத்துக்கொள்வோம். வியாதி என்பது ஒரு அசைப்பு. வியாதியில் தேவனுடைய மக்கள் படுகிற பாடு! அந்த வியாதி குணமான பின்பு அவர்களுக்குள் என்ன இருக்கிறது என்று பார்க்க வேண்டும்.

இன்று நாம் பெரும்பாலும் பற்றிக்கொண்டிருக்கிற இனிமையானது, அருமையானது, விலையேறப்பெற்றது அல்லது இது இருந்தால் நல்ல வாழ்க்கை, இது இல்லையென்றால் நல்ல வாழ்க்கை

இல்லை என்று நாம் கருதுகிறோம் இல்லையா? அவைகளெல்லாம் அசைக்கப்படும்போது என்ன வாகும்? இல்பொருளாகிவிடும், ஒன்றுமில்லாமல் போய்விடும்.

அப்படி நாம் விலையேறப்பெற்றதாக, அருமையானதாகக் கருதக்கூடியவை ஆவிக்குரியதாகக்கூடத் தோன்றலாம். சில பொருட்கள் இந்தப் பொருளாதாரத்துக்குரியதாக இருக்கலாம். சில பொருட்கள் இந்த உலகத்துக்குரியதாக இருக்கலாம். பல்வேறுபட்ட காரியங்கள் இருக்கலாம். நிலபுலன்கள் இந்த உலகத்துக்குரியது. படிப்பு, பொருள், செல்வங்கள்.. அவை இந்த உடலுக்குரியவை. சுகம், பலம், நண்பர்கள், உறவினர்கள், அவர்கள் இந்த சமூக வாழ்க்கைக்கு உரியவர்கள். எனவே, நாம் பற்றிக் கொண்டிருப்பவை இந்த உலகத்துக்குரியதாகவோ, பூமிக்குரியதாகவோ, உடலுக்குரியதாகவோ, பொருளாதாரத்துக்குரியதாகவோ, ஏன் ஆவிக்குரியதாகவோகூடக் காட்சியளிக்கலாம். இறுதியான ஓர் அசைப்பு ஏற்படும்போது தேவனுடைய பிள்ளைகளுக்குள் அசைக்கப்படமுடியாத ஒன்று இருக்க வேண்டும் என்று தேவன் விரும்புகிறார். இதை உருவாக்குவதற்காக இப்படிப்பட்ட சூழ்நிலைகளை தேவன் நம் வாழ்க்கையில் அமைக்கிறார்.

### மீந்திருக்கிறவர்கள் கனி கொடுப்பார்கள்

"யூதா வம்சத்தாரில் தப்பி மீந்திருக்கிறவர்கள் மறுபடியும் கீழே வேர்பற்றி மேலே கனி கொடுப் பார்கள்" *(ஏசாயா 37:31)*. மீந்திருக்கிறவர்கள் என்றால் மீதியாயிருக்கிறவர்கள் என்று பொருள். தேவ னுடைய மக்கள் தேவனோடு ஏதோ ஓர் உறவும், தொடர்பும் வைத்திருக்கிறார்கள். ஆனால், ஓர் அசைப்பு நடந்தபின் பார்த்தால் தேவனோடு, அவர்களுக்கு உறவும் இருக்காது, தொடர்பும் இருக் காது. இவர்களா தேவனோடு உறவும், தொடர்பும், நெருக்கமும் வைத்திருந்தவர்கள்போல் காட்சி யளித்தவர்கள் என்று தோன்றும்? நாம் ஆச்சரியப்படும் அளவுக்கு அந்த அசைப்புக்குப்பிறகு அவர் களுக்குத் தேவனோடு ஒன்றும் இருக்காது. ஆனால், ஒரு கூட்டம் மக்கள் மிஞ்சியிருப்பார்கள். அவர்கள் மீந்திருக்கிறவர்கள், மீதியானவர்கள். எல்லாரும் அப்படி இருக்கமாட்டார்கள். ஆனால், மீதியானவர்கள் கொஞ்சப்பேர் இருப்பார்கள். அசைப்புக்குப்பிறகும் அவர்களுக்குத் தேவனோடு தொடர்பும், உறவும், நெருக்கமும் இருக்கும். இன்னும் சொல்லப்போனால் அந்த அசைப்புக்குப் பிறகு தேவனோடு அவர்களுடைய தொடர்பும், உறவும், நெருக்கமும் முந்தி இருந்ததைவிட இன் னும் அதிகமாகவும், ஆழமாகவும் இருக்கும்.

இவர்கள் மீதியானவர்கள்; இஸ்ரயேலில் மீதியானவர்கள் கீழே வேர்பற்றி மேலே கனி கொடுப் பார்கள். "நீதிமானுடைய வேர் கனிகொடுக்கும்" *(நீதி. 12:12)*. நீங்கள் கொஞ்சம் ஆராய்ச்சி செய்து பார்க்கலாம். வேதாகமத்தில் வேரைப்பற்றி எங்கெல்லாம் சொல்லப்பட்டிருக்கிறது, என்ன சொல்லப் பட்டிருக்கிறது என்று பாருங்கள். "இப்பொழுதே கோடாரியானது மரங்களின் வேர் அருகே வைத் திருக்கிறது. ஆகையால், நல்ல கனிகொடாத மரமெல்லாம் வெட்டுண்டு அக்கினியிலே போடப் படும்." "வெயில் ஏறினபோதோ வேரில்லாமல் உலர்ந்துபோயிற்று". "என் பரமபிதா நடாத நாற்றெல் லாம் வேரோடே பிடுங்கப்படும்." வேர் பற்றிய ஒரு சின்ன ஆராய்ச்சி செய்து பாருங்கள்.

### நல்ல பங்கு

அசைக்கப்படும்போது அசைக்கப்படாத, எடுக்கப்படாத ஒன்று அங்கு இருக்க வேண்டும். மரி யாளைப்பற்றி ஆண்டவராகிய இயேசு இப்படிச் சொன்னார்: மரியாள் தன்னை விட்டெடுபடாத நல்ல பங்கைத் தெரிந்துகொண்டாள். பல காரியங்கள் எடுபட்டுப்போகும். அசைக்கப்படாத ஓர் அருமையா பொருளை--அருமையான விசுவாசம், அருமையான நம்பிக்கை, அருமையான கிறிஸ்து--உருவாக்கு வதற்காக தேவன் என்ன செய்வார்? இப்படிப்பட்ட படையெடுப்பை எடுத்தவுடனே தேவன் தடுக்க மாட்டார். படையெடுப்பு தொடங்கும், படையெடுப்பு தொடரும், படையெடுப்பு நடக்கும், பல மாதங்கள் நடக்கும். பல மாதங்கள் அவர்கள் நம் வாழ்க்கையை முற்றுகை போட்டிருப்பார்கள். ஒவ்வொரு நாள் காலையில் எழும்போதும் பதற்றத்தோடுதான் எழுந்திருப்போம். "இன்றைக்கு அசீரி யப் படைகள் வாசலை உடைத்துக்கொண்டு உள்ளே புகுந்துவிடுமோ!" என்று நினைப்போம் அல் லது இரவு தூங்கப்போகும்போது, "இன்றிரவு அவர்களுடைய படை உள்ளே புகுந்துவிடுமோ!" என்ற பயம். இரவு தூங்கப்போகும்போது தூக்கம் வராது. ஏன் இரவு வருகிறது என்ற கேள்வி. விடிந்தபிறகு, "ஏன் விடிந்தது" என்ற கவலை, பயம், திகில்.

### கிறிஸ்துவுக்குள் வேர் ஆழமாகச் செல்லுதல்

தேவனுடைய நோக்கம் என்னவென்றால் இந்தச் சூழ்நிலையில் தேவனுடைய மக்களுடைய வேர் கிறிஸ்துவுக்குள் இன்னும் ஆழமாக இறங்க வேண்டும். யோவான் 6ஆம் அதிகாரத்தில் நாம் வாசித்

ததுபோல், தேவன் நம்மை சோதிக்கிறாரா என்றால் நிச்சயமாக சோதிக்கிறார், பரீட்சிக்கிறார். ஆனால், அவர் நம்மை ஏன் பரீட்சிக்கிறார் என்றால் உலகத்தார் சொல்வதுபோல், "அவன் ஆட்டு விக்கிறான்" என்பதல்ல. நான் அந்தப் பரீட்சையைச் சொல்லவில்லை. அவர் நம்மை சோதிக்கிறார். அசைக்கப்பட முடியாத ஒரு வேரை தேவனுடைய மக்களுக்குள் உருவாக்க வேண்டும் என்பதுதான் சோதனையில் அல்லது பரீட்சையில் தேவனுடைய நோக்கம். மேலோட்டமாக நாம் தேவனுடைய மக்களாக வாழலாம்; வேதத்தை வாசிக்கிறோம். விசுவாசம் இருக்கிறது. ஆனால், அனுபவ வாழ்க்கையில் நம்முடைய விசுவாசம் பரீட்சிக்கப்படாதவரை வேர் எப்படிப்பட்ட வேர் என்று தெரி யாது. வேர் அசைக்கப்பட வேண்டும். வேலையின்மை, பணமின்மை, சுகமின்மை, நண்பர்களை இழப்பது, உறவினர்களை இழப்பது, இவைகளெல்லாம் என்ன செய்யும்? நம் வேரை தேவனுக்குள் ஆழமாக இறங்கச் செய்யும். அதற்கு மாறாக தேவனோடு நமக்கு மேலோட்டமான நம்பிக்கை, விசுவாசம்தான் இருக்கும் என்றால் வேரை என்ன செய்யும்? வெறுமனே உதட்டளவில்தான் நம்பிக்கை இருக்கிறது. அப்படியானால் இந்த அசைப்பு வந்தவுடனே வேர் ஆழமாகப் போவதற் குப்பதிலாக வேரை பிடுங்கிக்கொண்டு போய்விடும்.

ஆழமான வேரின் விளைவு என்னவென்றால் அவர்கள் மேலே கனிகொடுப்பார்கள். கனிகொடுப்ப தென்றால் நாம் பல மக்களுக்குப் பயனுள்ளவர்களாக இருப்போம். மக்களுடைய வாழ்க்கையில் பலவிதமான பிரச்சினைகள் இருக்கும். நாம் ஒன்றைக் கவனித்திருப்போம். ஒரு பிரச்சினை மக்களின் பார்வைக்கு வருமென்றால் அதற்குத் தீர்வு சொல்லாத மக்கள் இருக்கமாட்டார்கள். ஏதாவது ஒன்றை சொல்லிவிட்டுத்தான் போவார்கள். "என் மகன் +2 படிக்கிறான்," என்று சொன்னால் போதும். "இந் தக் கல்லூரியில் படிக்கலாம். இந்தப் பாடம் படிக்கலாம்," என்று சொல்வார்கள். உடனே பக்கத்தில் இருப்பவர் ஓர் ஆலோசனை சொல்லிவிட்டுப் போவார். பொதுவாக யாரும், "இது என் காரியம் இல்லை. இதில் ஆலோசனை சொல்வதற்கு எனக்கு ஞானமோ அனுபவமே இல்லை," என்று ஒதுங்கமாட்டார்கள். ஏதாவது ஒன்றைச் சொல்வார்கள். சுகமில்லை என்று சொன்னால், "இந்த டாக்ட ரிடம் போங்கள், இந்த மருத்துவமனைக்குப் போங்கள்," என்று சொல்வார்கள்.

பயனுள்ள, கனிகொடுக்கிற வாழ்க்கை என்றால் உண்மையில் குறிபார்த்ததுபோல் அவர்களுடைய தேவையைப் பூர்த்திசெய்ய வேண்டும். அவர்கள் ஆச்சரியப்படுவார்கள். ஒருவர் ஒரு பிரச்சினை யோடு வருகிறார். அவர் ஒரு சிக்கலில், ஒரு நெருக்கத்தில் இருக்கிறார். உங்களிடம் வருகிறார். நீங்கள் ஜெபிக்கிறீர்கள் அல்லது ஒரு வார்த்தை சொல்லுகிறீர்கள். அவர்கள் அதற்குக் கீழ்ப்படி கிறார்கள். அப்போது அவர்கள் விடுதலை பெறுகிறார்கள். இது பயனுள்ள வாழ்க்கை. கனி நிறைந்த வாழ்க்கை. நாம் இப்படி இருக்க வேண்டும் என்று ஆசைப்படுகிறோம். இல்லையா? ஆனால், எப்படிப்பட்ட மக்கள்தான் கனிகொடுக்க முடியும்? ஆழமான வேராக இருந்தால்தான் கனி கொடுக்க முடியும். வேர் மேலோட்டமானது என்றால் நிச்சயமாக நாம் கனி கொடுக்க முடியாது.

### தேவனுடைய விருப்பம்— கனி நிறைந்த வாழ்க்கை

நாம் மிகவும் தெளிந்த சிந்தனையுள்ளவர்களாக இருக்க வேண்டும். வேர் ஆழமாகப் போனால் அதனால் என்ன? தம் மக்களைக்கொண்டு கிறஸ்துவை மற்றவர்களுக்குப் பயனுள்ள விதத்தில் கொடுப்பதற்கு அவருக்கு மக்கள் தேவை. இது அவருடைய ஆசை. "இந்த வருடத்தில் நாம் பத்துப் பேரை தேவனிடத்தில் கொண்டுவர வேண்டும்," என்ற எந்த இலக்கும் நாம் வைத்துக் கொள்வ தில்லை. ஆனால், நாம் தேவனுக்காகக் கனிகொடுக்கவில்லையென்றால் மனதில் ஒரு வெறுமை ஏற் படும். நான் கிறிஸ்துவுக்குள் ஆழமாக வேர் கொண்டிருக்கிறேன் என்றால் கிறிஸ்துவைக்கொண்டு ஒரு சிலரையாவது விடுவிக்க முடியும், மீட்க முடியும். சிலர் நம்மைச்சுற்றி வந்து கொண்டிருப் பார்கள். அவர்களுக்குப் பிரச்சினைகள் இருக்கும். ஆனால், அந்தப் பிரச்சினைகள் என்னவென்றுகூட நமக்குத் தெரியாது.

கனிகொடுக்கிற வாழ்க்கை என்றால், இயேசுவை அறியாதவர்களுக்கு இயேசுவைக் கொண்டு விடுதலை கொடுப்பது மட்டும் அல்ல. இயேசுவை அறிந்தவர்களுக்கும் அவர்கள் வளர்வதற்கு ஊக்கமும், திடமும், பலமும் கொடுக்க வேண்டும்.

நம்முடைய பணம், நேரம், உடல் உழைப்பு ஆகியவைகளில் ஒரு பங்கை நாம் மற்றவர்களுக்காக ஒதுக்கிவைக்க வேண்டும். நாம் கனிகொடுக்க வேண்டும் என்றால் நம் வளங்களிலெல்லாம் ஒரு பங்கை நாம் ஒதுக்கிவைக்க வேண்டும். "இந்த வாரத்தில் நான் இரண்டு மணி நேரத்தைத் தேவ னுடைய மக்களுக்காக, தேவனுக்காக, செலவழிப்பதற்காக ஒதுக்கி வைக்கிறேன்," என்று ஒதுக்கி வைக்க வேண்டும். நேரத்தைத் தேவனுக்காக ஒதுக்கிவையுங்கள். ஒதுக்கிவைப்பதென்றால் ஜெபிப்

பதற்காகவும், வேதம் வாசிப்பதற்காகவும் என்று நான் சொல்லவில்லை. என்னுடைய தேவைகளுக் காக, என்னுடைய நலன்களுக்காக அல்ல. பிறருக்காக, பிறருடைய தேவைகளுக்காக, நலன்களுக் காக, அவர்கள் தேவனுடைய மக்களாக இருக்கலாம். தேவனை அறிகிற நிலையில் இருக்கிற மக்களாகவும் இருக்கலாம். இவர்களுக்காக நாம் நேரத்தை ஒதுக்கிவைக்க வேண்டும். மூன்று மணி நேரமோ, ஆறு மணி நேரமோ நாம் ஒதுக்கிவைத்து, செலவழித்துப் பார்க்க வேண்டும். அதில் நாம் தேவனுடைய கனியைப் பார்ப்போம். இதில் என்ன பயன்? அது எனக்குத் தெரியாது. ஆனால், தேவன் அதில் ஒரு கனியை வைத்திருப்பார். அந்தக் கனி தேவனுடைய மக்களுக்குள் அல்லது தேவனை அறிகிற நிலையில் இருக்கிற மக்களுக்குள் கனி உருவாக வேண்டும் என்பதற்காக இருக்கலாம். நிச்சயமாக நாம் இதைச் செய்ய வேண்டும். தேவன் தம்முடைய பிள்ளைகளாகிய நாம் பெரிய அளவில் கனி கொடுக்கிற வாழ்க்கை வாழ வேண்டும் என்று விரும்புகிறார். நாம் கனியற்ற வாழ்க்கை வாழ்வது தேவனுடைய நோக்கம் அல்ல. நாம் சிறு குழந்தைகளுக்கும்கூட கிறிஸ்துவை வழங்க வேண்டும். சிறு குழந்தைகளை "இப்படிச் செய்யுங்கள். இங்கே உட்கார்" என்று சொல்லும் போது அவர்கள் ஏற்ற காலத்தில் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்வதற்கு அவர்களை ஆயத்தப்படுத்து கிறோம். ஆகவே, நம் வாழ்க்கைச் சூழல் எப்படி இருந்தாலும் சரி, நம்முடைய ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து போதுமானவர்.

### தேவனுடைய நோக்கம்

பேயின் வழி பயம், திகில், நடுக்கம். "இத்தோடு கதை முடிந்தது," என்பது சாத்தானுடைய வாதம், எண்ணம். ஆனால், தேவனுடைய எண்ணம் வேறு. இதன்மூலமாகத் தேவன் இரண்டு காரியங்களைச் செய்கிறார். ஒன்று தேவன் தம் வல்லமை எவ்வளவு பெரியது என்று விளங்கப்பண்ணுகிறார். ஏசாயா 36, 37இல் தேவன் கடைசியில் என்ன பண்ணுகிறார்? தேவன் ஒரேவொரு தூதனை அனுப்பி அசீரியப்படையை அழித்துவிடுகிறார். அப்படியானால் தேவனுடைய வல்லமை எவ்வளவு பெரியது? நம்மால் கற்பனைகூட செய்ய முடியாது. இந்தச் சூழ்நிலை எனக்கு மிகவும் மிஞ்சியது என்று நாம் நினைப்போம்.

நாம் இப்படிக்கூட நினைப்போம். "அவர்கள் தோற்றுப்போனார்கள். அவர்கள் செத்துவிட்டார்கள். அவர்கள் ஒன்றும் இல்லாமல் போய்விட்டார்கள்," என்பதுபோன்ற இப்படிப்பட்ட கதைகளைக் கேட் கும்போது "பட்டியலில் அடுத்த ஆள் நான்தானோ!" என்று நாம் நினைப்போம். அது தவறான எண் ணம், இதன் பொருள் நாம் சாக மாட்டோம் அல்லது தோற்க மாட்டோம் என்பதல்ல. ஆனால் பயத் தோடு, நடுக்கத்தோடு, திகிலோடு நாம் வாழ்வதல்ல தேவனுடைய சித்தம். கீழே வேர் பற்றி மேலே கனிகொடுக்க வேண்டும். நம் வாழ்க்கையில் எந்த அளவுக்கு நாம் கிறிஸ்துவுக்குள் ஆழமாக வேர் கொண்டிருக்க வேண்டும் என்றால் நாம் ஒரு சிலருக்காவது கிறிஸ்துவை வழங்க வேண்டும். வெறுமையான ஒரு வாழ்க்கை வாழ்ந்துவிட்டுச் செல்வது தேவனுடைய எண்ணம் அல்ல. எனவே நாம் அதுபோன்ற சூழ்நிலைவழியாகச் சென்று நாம் ஆழமாக வேர்விட்டிருக்கிறோமா என்று பார்க்க வேண்டும்.

ஒரு மரம் இருக்கிறதாம். அந்த மரத்தின் வேர் பல கிலோமீட்டர் தூரத்துக்குச் செல்லுமாம். கோடை காலத்தில், வறட்சியான காலத்தில், எங்கு தண்ணீர் இருக்கிறதோ அந்த இடத்தைத் தேடி பல கிலோ மீட்டர் தூரத்துக்கு அதின் வேர் செல்லுமாம். நம்முடைய ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து எந்த நிலைமைக்கும் போதுமானவர்.

சாவைக்குறித்து நான் இப்படிச் சொல்வதுண்டு. எப்போது சாகலாம் என்றால், "நல்ல போராட்டத் தைப் போராடினேன். ஓட்டத்தை முடித்தேன். விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன்," என்ற உணர்வு வரும்போது கர்த்தரிடம் போகலாம். தேவன் நமக்கு ஓர் ஓட்டத்தை வைத்திருக்கிறார். ஆனால், அந்த ஓட்டத்தை முடித்ததுபோல் இன்னும் ஓர் உணர்வு வரவில்லை. அந்தச் சமயத்தில் கர்த்தரிடத் தில்போய் நீங்கள் என்ன செய்யப்போகிறீர்கள்? குறைந்த பட்சம் நம் பிள்ளைகளையாவது நாம் கிறிஸ்துவுக்குள் நிறுத்தியிருக்க வேண்டும். கிறிஸ்துவுக்குள் நல்ல ஓட்டம் என்றால் கிறிஸ்துவுக்குள் பல நூறு பிள்ளைகளைப் பெற்றெடுத்திருக்க வேண்டும். எந்த ஆதாரத்தின்படி இதைச் சொல்லு கிறேன் என்றால் பிலிப்பியரில் பவுல் சொல்லுகிறார் இல்லையா? "தேகத்தை விட்டுப் பிரிந்து, கிறிஸ்துவுடனேகூட இருக்க எனக்கு ஆசையுண்டு. அது அதிக நன்மையாயிருக்கும். அப்படியிருந் தும், நான் சரீரத்தில் தரித்திருப்பது உங்களுக்கு அதிக அவசியம்." எந்தச் சூழ்நிலை வந்தாலும், எந்தச் சூழ்நிலைக்கும் நம் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து போதுமானவர்; அவரே நம் தேவையான நிரப்பீடு; எல்லாப் பிரச்சினைக்கும் அவரே தீர்வு; எல்லாக் குறைவுக்கும் அவரே நிறைவு. அது போன்ற சூழ்நிலையில் இருக்கிற மக்களை நாம் கிறிஸ்துவைக் கொண்டு விடுவிக்க வேண்டும்.

எனவே பயம், நடுக்கம், திகில், தோல்வி, அழிவு இந்த எண்ணங்கள் தேவனுடைய எண்ணங்கள் அல்ல. அவைகள் சாத்தானின் எண்ணங்கள்.

அசீரியன் சொல்லுகிறான். "நாங்கள் எவ்வளவு பேரை அழித்துவிட்டோம். உன்னையும் துவம்சம் பண்ணிவிடுவோம். நீ இருந்த சுவடுகூட இருக்காது." இது சாத்தானின் எண்ணம். ஆனால், தேவனின் எண்ணம் அழிவல்ல. அவருடைய வல்லமை விளங்க வேண்டும். அவரை இதுவரை அறியாத விதத்தில் அறிவோம். அவருடைய வல்லமையைப் பார்ப்போம். இரண்டவது விளைவு இஸ்ரவேலின் வேர் கீழே ஆழமாகச் செல்லும். கடைசியில் தேவனுக்கு அசைக்கமுடியாத அருமையான ஒன்று கிடைக்கும். பேதுரு தன் நிருபத்தில் எழுதுகிறார். "அழிந்துபோகிற பொன் அக்கினியினாலே சோதிக்கப்படும். அதைப் பார்க்கிலும் விலையேறப்பெற்றதாயிருக்கிற உங்கள் விசுவாசம் சோதிக்கப்பட வேண்டும்" *(1 பேதுரு 1:7).*

இந்த எண்ணம் நம்மை ஆற்ற வேண்டும், தேற்ற வேண்டும், ஊக்குவிக்க வேண்டும், பலப்படுத்த வேண்டும், திடப்படுத்த வேண்டும். சூழ்நிலை ஒரு நாள் இருக்கலாம்; ஒரு வாரம் இருக்கலாம்; ஒரு மாதம் இருக்கலாம்; ஒரு வருடம் இருக்கலாம்; சில வருடங்கள்கூட இருக்கலாம். ஆனால், அதன் விளைவு தேவனுடைய வல்லமை நம்மேல் விளங்கும் *(2 கொரி. 12:9)* மக்கள் அதைக் காண்பார்கள். நம் வேர் ஆழமாகும். அதன் விளைவு நாம் கனி கொடுக்கிறவர்களாக மாறுவோம். பலருக்கு நாம் கிறிஸ்துவைக் கொடுத்து அவர்களை விடுவிப்போம்.